10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 190 வியாழக்கிழமை நவம்பர் 30 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48



## கோத்தா கைதுக்கு இடைக்காலத் தடை

கொழும்பு, நவ. 30

கோத்தபாய ராஜபக்சவைக் கைது செய்வதற்கு வரும் டிசம்பர் 6 ஆம் திகதி வரை இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது மேன்முறையீட்டு நீதிமன்றம் .

முன்னாள் பாதுகாப்பு செயலரும், மகிந்த ராஜபக்சவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ச அரச நிதியை

06

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்

## அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்

### கனடா தூதுவரிடம் யாழ். ஆயர் வலியுறுத்து!



கொழும்பு, நவ.30

"காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் காத்திரமான நடவடிக்கை எடுக்க இலங்கை அரசாங்கத்துக்கு கனேடிய அரசு அழுத்தங்களை வழங்க வேண்டும்" - இவ்வாறு தன்னைச் சந்தித்த இலங்கைக்கான கனடா தூதுவர் டேவிட் மைக்கினனி

06

## விரிவடைகிறது போராட்டம்




யாழ்ப்பாணம், நவ. 30

வடக்குக்கான வெளி மாகாண பஸ் சேவைகள் இன்று முதல் இடம்பெறாது என வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய முகாமையாளர், பாதுகாப்பு அதிகாரியை இடமாற்றம்

06

## கொழும்பில் பதுங்கிய ஆவாக்கள் கைது

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுக்களில் ஈடுபட்டுவிட்டு, தப்பித்து கொழும்பில் பதுங்கியிருந்த ஆவா குழுவைச் சேர்ந்த மூவரைக் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆவா குழுவைச் சேர்ந்த முஸ்லிம்

06

# தனிநாடு சமஷ்டி இன்றேல்!



### ஆஸி. தூதுவருக்கு முதலமைச்சர் விளக்கம்

யாழ்ப்பாணம், நவம்பர் 30

"அவுஸ்ரேலியா போன்ற சமஷ்டி அதிகாரத்தையே தமிழ் மக்கள் கேட்கின்றனர். அதை வழங்கினால் தமிழர்கள் தனிநாடாக மாற்றி விடுவர் என்ற ஐயம் தென்னிலங்கை ஆட்சியாளர்களிடம் உண்டு. ஆனால் சமஷ்டியை வழங்காது விட்டாலே தமிழர்கள் தனிநாடு கேட்கும் நிலைமைக்கு தள்ளப்படுவர்."

– தம்மைச் சந்தித்த அவுஸ்ரேலியத் தூதுவர் பைரஸ் ஹட்சனிடம் இப்படிக் கூறியிருக்கிறார் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

யாழ்ப்பாணம் வந்துள்ள அவுஸ்ரேலியத் தூதுவர் பைரஸ்

06

## பேய்க்காற்றால் சுழன்றது தென்னிலங்கை
### 15 பேர் வைத்தியசாலைகளில்

கொழும்பு, நவ. 30

தென்னிலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் நேற்று வீசிய கடும் காற்றால் 15 பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு, காலி, மாத்தறை, களுத்துறை, அம்பாந்தோட்டை கரையோரப் பிரதேசங்களிலும் பதுளை, நுவரெலியாப் பகுதிகளிலும் நேற்று

06

## பிரபாகரனே சிறந்த தலைவர் சிங்களத் தலைவர்களை விட

### ஞானசார தேரருக்கு திடீர் ஞானம்





கொழும்பு, நவ. 30

"சிங்களத் தலைவர்களைவிட தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனே சிறந்த தலைவர். அவரிடம் நேர்மை இருந்தது. எந்த நோக்கத்திற்காக அவர்

06

## அரசியல் கைதிகளுக்கு சாதகம்? வழக்கு அநுராதபுரத்தில் இல்லை

கொழும்பு, நவ.30

அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 3 அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகள் இனி அநுராதபுரம் மேல் நீதிமன்றில் இடம்பெறாது என மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளுக்கு எதிரான சாட்சிகள் இருவர் வெளிநாட்டில் உள்ளனர். அவர்களைத் தொடர்பு கொள்ள முடியாததால் அவர்களின் முடிவைக் கேட்க அவகாசம் வேண்டும் என்றும் அரச தரப்பு சட்டத்தரணி நீதிமன்றில் நேற்றுக் கோரினார்.

வவுனியாவில் இருந்து அநுராதபுரம் நீதிமன்றுக்கு வழக்கு மாற்றப்பட்டது. தங்கள் வழக்கை மீண்டும் வவுனியாவுக்கே மாற்ற வேண்டும் எனக் கோரி 3 அரசியல் கைதிகளும் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டனர். அத்துடன் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில்

06




உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
வியாழன் 30 நவம்பர் 2017




# கோரிக்கையை நிறைவேற்றி போராட்டத்தை முடியுங்கள்

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்


யாழ்ப்பாணம்,நவ.30

இ.போ.ச. ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பால் ஆசிரியர்களும், மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே ஊழியர்களின் கோரிக்கையை ஏற்று உரியவர்கள் போரட்டத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

“வடக்கு மாகாணத்தில் உள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஊழியர்கள் இரண்டு நாட்களாக மேற்கொண்டுள்ள போராட்டத்தால் பல தரப்பினரும் பெரும் அசௌகரியங்களுக்கு உட்பட்டுள்ளனர். குறிப்பாக பாடசாலை மாணவர்களும், அதிபர், ஆசிரியர்களுமே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மாணவர்களின் மூன்றாம் தவணைப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் இவர்களின் போராட்டம் மாணவர்களின் கல்வியில் பாரிய பின்னடைவை ஏற்படுத்துமென்பதால், ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுப் போக்குவரத்துச் சேவையை உடனடியாக ஆரம்பிக்க வழியேற்படுத்த வேண்டும்.

மேலும், ஊழியர்களின் போராட்டம் தொடருமாக இருந்தால் அதிபர்கள், ஆசிரியர்களும் அவர்களுக்குத் துணையாகப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதோடு, பாடசாலைகள் அனைத்தும் ஸ்தம்பிக்கும் நிலை உருவாகும். வடமாகாணத்தில் அனேகமான மாணவர்கள் பருவகாலச் சீட்டுகளுடன் இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பேரூந்துகளில் பயணம் செய்வதோடு, தூர இடங்களில் பணியாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் பலர் இந்தச் சேவையைப் பெரிதும் பயன்படுத்துகின்றனர். பேரூந்துச் சேவை தடைப்படுவதால் கடமைக்குச் செல்வது முடியாத காரியமாக உள்ளது. ஆகையால் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் பள்ளி செல்லும் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொண்டு உடனடியாக போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வாருங்கள்” எனவும் அந்தச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ)

# மண்சரிவு எச்சரிக்கை!



கொழும்பு,நவ.30

மாத்தளை மற்றும் கண்டி ஆகிய இரு மாவட்டங்களிற்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்றுப் புதன் கிழமை அறிவித்துள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன அறிக்கையில், மாத்தளை மாவட்டத்தில் லக்கல, பள்ளேகல பிரதேச செயலக பிரிவும் சுற்றுப்புறங்களிலும், அல்கடுவ பிரதேச செயலகப் பிரிவும் அதன் சுற்றுப் புறங்களிலும் மற்றும் கண்டி மத- தும்பர பிரதேச செயலகப் பிரிவும் அதன் சுற்றுப்புறங்களை அண்மித்த இடங்களிலும் மண்சரிவு அபாயம் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. கடந்த 24 மணித்தியாலங்களில் மழைவீழ்ச்சி 75 மில்லிமீற்றராக அதிகரித்துள்ளதனால், மேலும் மழை தொடருமாயின் மண்சரிவு, பாறை விழுகை, நிலவெட்டுசாய்வு மற்றும் தரை உள்ளிறக்கம் என்பவை தொடர்பில் அவதானமாகச் செயற்படுமாறும் தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது. (அ)

# சர்வதேச நடனத் திருவிழா யாழ். நகரில் நாளை மாலை

யாழ்ப்பாணம், நவ.30

நடனம் மூலம் பல்வேறு சமூகங்களை ஒன்றிணைக்கும் நோக்கோடு ‘நற்ரன்டா’ அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெறும் சர்வதேச நடனத் திருவிழாவின் ஆரம்ப நிகழ்வுகள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளன.

இலங்கை உட்பட சர்வதேச நாடுகள் பலவற்றின் நடனக் கலைஞர்கள் பங்கு கொள்ளும் இவ் விழாவின் யாழ்ப்பாண நிகழ்வுகளுக்கான இணை ஏற்பாட்டாளராக திருமறைக்கலாமன்றம் செயற்படுகின்றது.

நாளை இடம்பெறவுள்ள நடனத்திருவிழாவில் இந்தியா, இந்தோனேசியா, ரஷ்யா, லண்டன், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த புகழ்பெற்ற நடனக் கலைஞர்களின் நடன நிகழ்வுகளுடன் திருமறைக் கலாமன்றம், மட்டக்களப்பு அரங்கு ஆய்வுக் கூடம், ‘நற்ரன்டா’ அமைப்பு ஆகியவற்றின் நடன நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 7 மாணவர்களுக்கு மிதிவண்டிகள்



யாழ்ப்பாணம், நவ.30

மகளிர் விவகார அமைச்சரால் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது!

வட மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து, மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனால் 7 மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

வட மாகாணக் கல்வித் திணைக்கள வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில், மிகவும்வறுமைக் கோட்டுக்குள்வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கற்றல் செயற்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு இந்த மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. (அ)

# வெளிநாடு செல்லாதீர்!




கொழும்பு,நவ.30

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரையும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளக் கூடாது என்று அந்தக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

எதிர்வரும் டிசெம்பர் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் 2018ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்த வாக்கெடுப்பு முடியும் வரையில், ஐதேக அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளக் கூடாது என்று ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார். முன்னரே விடுக்கப்பட்டிருந்த அதிகாரபூர்வ அழைப்புகளை ஏற்றுக் கொண்டிருந்தாலும் கூட, இந்தக் காலப்பகுதியில் வெளிநாடு செல்வதற்கு அமைச்சர்களோ நாடாளுமன்ற உறுப்பினர்களோ அனுமதிக்கப்படமாட்டார்கள். நாடாளுமன்ற வளாகத்தில் கடந்த திங்கட்கிழமை நடந்த ஐ.தே.க.வின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே இந்தக் கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளார். கூட்டு எதிரணியினருடன் இணைந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் வரவு- செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்கும் வாய்ப்புகளை இல்லாமல் செய்யும் நோக்கிலேயே, பிரதமர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (அ)

# முல்லைக் கடலில் திடீர் மாற்றங்கள்



முல்லைத்தீவு,நவ.30

முல்லைத்தீவுக் கடற்பகுதி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை முதல், இதுவரை இல்லாத வகையில் மாற்றமடைந்து காணப்படுவதாக, அந்தப் பகுதி மீனவர்கள் கடற்படையினருக்குத் தெரிவித்தனர்.

இதனையடுத்து, அங்கு சென்ற கடற்படையினர், அடிவானம் வரை குறித்த கடற்பகுதி கறுப்பு நிறத்தில் காணப்பட்டதை அவதானித்தனர். மேலும், மீனவர்களுக்குக் கடலுக்கு செல்ல வேண்டாம் எனவும் அறிவித்தனர். எனினும், சம்பவத்துக்கு முன்னர் பல மீனவக் குழுவினர் கடலுக்குப் புறப்பட்டுச் சென்று விட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

மேலும், கடந்த மூன்று வாரங்களாகப் பெய்த மழையினால் முல்லைத்தீவுக் கடலில் நீர் மட்டம் 5 அடி வரை மேலெழுந்ததோடு, கடலின் இயல்புத் தன்மையிலும் மாற்றம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# மெழுகுவர்த்தியில் பரீட்சை

கொழும்பு,நவ.30

கிழக்கு மாகாணத்தில் காற்றுடன்கூடிய கடும் அடை மழை பெய்து வருகின்றது.

இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கான மூன்றாம் தவணைப் பரீட்சைகளும் நடைபெற்று வருகின்றன

காலை நேரத்திலும் இருள்சூழ்ந்து காணப்படுவதால் வகுப்பறைகளும் இருளடைந்து காட்சியளிக்கின்றன. பல பாடசாலைகளில் மாணவர்கள், மெழுவர்த்தி ஒளியிலேயே பரீட்சை எழுதுகின்றனர். குருமண்வெளி சிவசக்தி வித்தியாலய மாணவர்கள், மெழுகுவர்த்தி ஒளியிலேயே பரீட்சை எழுதியமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி Ethiroli
வியாழன். 30 நவம்பர் 2017 ethirolimedia@gmail.com

# என்னடா நடக்குது இஞ்ச?

இலங்கை அரசியல் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு குழம்பிய குட்டையாக உள்ளது. கண்ணைக் கட்டி காட்டில் விட்டால் கூட இந்தளவுக்குத் தலை சுற்றாது. யார், யார் என்னென்ன பதவியில் இருக்கிறார்களோ அவர்கள் அதற்காக வேலையைச் செய்வதை விடவும் அதற்கு மாறான வேலைகளை மட்டும் கச்சிதமாகச் செய்கிறார்கள்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற பதவியில் மைத்திரிபால சிறிசேன இருந்தாலும், நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. மைலோவில் சீனி கூடிவிட்டது என்று கண்ணீர் வடிக்கவும், காலி முகத்திடலில் காலாற நடந்து, செல்பி எடுத்து, 'எளிமையானவர்' என்று பெயர் எடுப்பதிலேயே அவரின் பதவிக்காலம் முடிந்துவிடும் போலிருக்கிறது.

உள்நாட்டு விவகாரங்களைக் கவனிப்பதை விடவும் இந்தியாவுக்கும், சீனாவுக்கும், மலேசியாக்கும் பறந்து செல்வதற்கும், இந்தியாவில் உள்ள எல்லாக் கோயில்களையும் தரிசிப்பதையுமே முழுநேரத் தொழிலாகக் கொண்டிருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இரா.சம்பந்தன் பெயருக்குத்தான் எதிர்க்கட்சித் தலைவர். ஆனால் அரசில் உள்ள அமைச்சர்களை விடவும் அதிவிசுவாசமாக அரசாங்கம் கொண்டு வரும் திட்டங்களையெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு, ஆமோதிக்கிறார். அரசில் உள்ள அமைச்சர்களோ தங்கள் அரசையே கேவலமாகப் பேசுகிறார்கள். சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு தொகுதியினர் மகிந்த ராஜபக்ச தலைமையில் புதியதொரு கட்சி தொடங்கி, உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடவேட்புமனுவும்தாக்கல்செய்துவிட்டார்கள். ஆனால் எந்தவொரு எம்.பி மீதும் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மகிந்தவும், அவர் சார்ந்தோரும் புதியதொரு கட்சியைத் தொடங்கினாலும், இன்னமும் சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களாகவே வலம்வருகிறார்கள்.

இப்படி நீளும் இடியப்பச் சிக்கல் போதாதென்று, இப்போது சுதந்திரக் கட்சியைக் கழற்றிவிட்டு, கூட்டமைப்போடு சேர்ந்து ஆட்சியமைக்க ஐ.தே.க தயாராகி வருவதாகக் கூறப்படுகின்றது. அதேவேளை, சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், மகிந்த அணியோடு சேர்ந்து பாதீட்டைத் தோற்கடிக்கத் திட்டம் தீட்டுவதாகவும் தகவல்கள் கசிகின்றன. அரசில் இருக்கும் இரு முஸ்லிம் அமைச்சர்கள் மகிந்த அணிக்கு தாவுவதற்கான பேச்சுவார்த்தைகளையும் தொடங்கிவிட்டனர். ஒட்டுமொத்தத்தில் அந்தரத்தில் ஆடிக்கொண்டிருக்கிறது நல்லாட்சி.

எப்படியாவது ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்று மகிந்தவும், எப்படியாவது ஆட்சியைத் தக்கவைக்க வேண்டுமென்று ரணிலும், இப்படியான ஆட்சி செய்வதை விட வீட்டுக்கே போய்விடலாம் என்ற வெறுப்பில் மைத்திரியும், இந்த ஆட்சியைத் தக்க வைத்தால் தான் எதிர்க்கட்சித் தலைவர் பதவி விட்டுப்போகாமல் இருக்கும் என்று முண்டு கொடுக்கும் சம்பந்தருமாக எல்லோரும் தத்தம் கோணத்தில் ஆடுகின்ற பகடை விளையாட்டே இந்தக் குழப்பங்களுக்கு மூலகாரணம். இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த அரசியல் தலைவர்கள் எல்லோரும் தத்தம் அதிகாரங்கள் பறிபோகவிடக்கூடாது என்றுதான் திட்டமிடுகிறார்களே தவிர, மக்களுக்காக ஒரு கணம் கூடச் சிந்திப்பதில்லை. அதனால் தான் இந்த ஆட்சி சந்தி சிரிக்குமளவுக்கு வந்திருக்கிறது. மக்களைப் பற்றி கிஞ்சித்தும் கவனத்தில் கொள்ளாத ஆட்சிக்கு நல்லாட்சி என்று பெயர் வேறு. என்ன செய்வது, இலங்கையில் பிறந்துவிட்டால், சகித்துக் கொண்டு வாழப் பழகுவோம். அதுவே இந்நாட்டு மக்களின் கூடப் பிறந்த குணமும் கூட.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"



# யாழில் இருந்து வவுனியாவுக்கு இ.போ.ச. வாகனத் தொடரணி

யாழ்ப்பாணம், நவ. 30

கறுப்புக் கொடிகள் கட்டியவாறு யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்கு வாகனத் தொடரணி நேற்று நடத்தப்பட்டது. வடபிராந்திய போக்குவரத்துச் சபை வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றது. இந்நிலையில் தொழிற்சங்கத்தினருடன் பேச்சு நடத்த இ.போ.சவின் உயரதிகாரி நேற்று வந்திருந்தார்.

அவரைச் சந்திப்பதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற தொழிற்சங்கத்தினர், தாங்கள் பயணித்த வாகனங்களில் கறுப்புக் கொடிகள் கட்டியவாறு தொடரணியாகச் சென்றனர். எனினும் இந்தப் பேச்சும் தோல்வியில் முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது. (ச)

# பின்தங்கிய பிரதேசங்களிலும் இனி இலகு பணப் பரிமாற்றம்

## யாழ்ப்பாணத்தில் 20 நிலையங்கள்

யாழ்ப்பாணம்,நவ.30

"டயலொக்கைபேசி இணைப்பு ஊடாக பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பணப்பரிமாற்றங்களை மேற்கொள்ள அவுஸ்ரேலிய அரசு நிதி உதவி வழங்கியுள்ளது. இந்தச் சேவையைப் பெறுவதற்காக முதல் கட்டமாக 20 இடங்களில் அலுவலகங்கள் அமைக்கப்படவுள்ளன. எதிர்காலத்தில் அவை 200 இடங்களில் நிறுவப்படும்" என அவுஸ்ரேலிய தூதுவர் தன்னிடம் தெரிவித்தார் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள அவுஸ்ரேலியத் தூதுவர் பைரஸ் ஹட்சன் நேற்று முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை சந்தித்துப் பேசினார். இதன்போது தூதுவர் பேசிய விடயங்களை முதலமைச்சர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

"மிகவும் பின்தங்கிய பிரதேச மக்கள் கைபேசி ஊடாக பணப்பரிமாற்றம் செய்யும் வசதியை டயலொக் தொலைபேசி இணைப்பு நிறுவனத்துடன் இணைந்து அவுஸ்ரேலிய அரசு முன்னெடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதல் கட்டமாக 20 இடங்களில் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. அந்த இடங்களில் இந்த சேவையைப் பெறுவதற்கான அலுவலகங்கள் அமைக்கப்படும். எதிர்காலத்தில் 200 இடங்களில் இந்தச் சேவை அலுவலகங்கள் அமைக்கப்படும்.

ஏ.ரி.எம். இயந்திரங்கள் ஊக பணத்தை மீளப்பெறுதல், சி.டி.எம். இயந்திரங்கள் ஊடாகப் பணத்தை வைப்பில் இடுதல் போன்று இந்த அலுவலகங்கள் ஊடாக கைபேசி இணைப்பின் வழியாக பணத்தைப் பரிமாற்றம் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது" எனக் கூறினார். (ச)

# வழி மறித்து 70 ஆயிரம் பணம் பறிப்பு

வடமராட்சி, நவ.30

தேங்காய் கொள்வனவுக்கு சென்றவரைத் தாக்கிவிட்டு 70 ஆயிரம் ரூபா பணத்தைப் பறித்துச் சென்றது இனந்தெரியாத குழு.

நேற்று அதிகாலை 5 மணியளவில் யாக்கரைக்கு அண்மையாக இடம்பெற்ற இச்சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது,

புலோலி வட மேற்கைச் சேர்ந்த சிவபாதம் ரகு என்பவர் தேங்காய் கொள்வனவு செய்வதற்காக கொடிகாமத்துக்கு சென்று கொண்டிருந்தார்.

இவர் யாக்கரை பகுதியில் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் கொண்ட குழு அவரை கொட்டன்களால் தாக்கியது. பின்னர் அவரின் பொக்கெற்றில் இருந்த 70 ஆயிரம் ரூபாவையும் பறித்துவிட்டுத் தப்பிச் சென்றது.

இச்சம்பவம் குறித்து நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச -11)

# பல்கலையில் நேற்று 'கலையாழி'வெளியீடு



யாழ்ப்பாணம், நவ,30

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட 37 ஆவது அணியினரின் (மூன்றாம் வருட அணியினரின்) 'கலையாழி' என்ற மாதப் பத்திரிகையின் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது.

மூன்றாம் வருட மாணவர் பிரதிநிதி மகேந்திரன் புதிய ஜோதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக கலைப்பீடாதிபதி கலாநிதி கே.சுதாகரும் கலந்து கொண்டனர்.

பத்திரிகைக்கான வெளியீட்டுரையை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆற்றினார். மதிப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச. லலீசன் வழங்கினார்.

பத்திரிகையின் முதற்பிரதியை கலாநிதி ஆறு.திருமுருகன் வெளியிட்டு வைக்க துணைவேந்தர் இ.விக்னேஸ்வரன் பெற்றுக்கொண்டார்.பத்திரிகை ஆசிரியர் வி.மகாசேனன் நன்றியுரை நல்கினார். (அ)

# இளைஞர் விலங்கிட்டு கடத்தல்? மறுக்கின்றனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், நவ. 30

இளைஞர் ஒருவர் கை விலங்கிட்டு கடத்திச் செல்லப்பட்டுள்ளார். ஓட்டோ ஒன்றில் வந்தவர்களே அவரைக் கடத்திச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். பல்கலைக்கழகம் முன்பாக குமாரசாமி வீதியில் நேற்றுப் பகல் 11 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞரை, பச்சை நிற ஓட்டோவில் வந்த மூவர் தள்ளி விழுத்தி கைகளுக்கு விலங்கிட்டனர். பின்னர் அவரை ஓட்டோவில் ஏற்றிச் சென்றுள்ளனர் எனக் கூறப்பட்டது.

பொலிஸார் அவரைக் கைது செய்திருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. எனினும் அவ்வாறு எவரையும் தாம் கைது செய்யவில்லை என்றும் பச்சை நிற ஓட்டோ எதுவும் தமது பாவனையில் இல்லை என்றும் யாழ்ப்பாணம்பொலிஸார்தெரிவித்தனர்.

இதேபாணியில் முன்னர் ஹைஏசில் வந்த பொலிஸார் யாழ். நகரில் இளைஞர் ஒருவரைப் கைது செய்திருந்தனர். (ச)

## இன்று நாளும் கோளும்

30.11.2017 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 14 ஆம் நாள்

துவாதசி பகல் 04.10 மணி வரை | ரேவதி பகல் 01.08 மணி வரை | அமிர்தயோகம்
இராகுகாலம் 1.30 - 03.00 | சுபநேரம் 10.45 - 11.45 | எமகண்டம் 06.00 - 07.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தாமதம் | வெற்றி | உயர்ச்சி | முயற்சி | பெருமை | பயம் | ஒய்வு | தனம் | உதவி | பாசம் | சிரமம் | சுகம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சீர் செய்வார்களா?

நெல்லியடி , நவ.30

நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் பொது மக்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்யச் செல்லும் காரியாலயத்தின் மேற்பகுதி சீரற்ற நிலையில் இருப்பதால், மழை நேரத்தில் நனைந்தபடியே தமது முறைப்பாடுகளைச் செய்யவேண்டியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.

குறித்த அறையின் ஓடுகளும் சீற்றும் உடைந்த நிலையில் இருப்பதால் அதனூடாக மழை பெய்யும்போது, கீழே இருப்பவர்கள் நனையவேண்டியுள்ளது. எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் குறித்த பகுதியைப் புனர்நிர் மாணம் செய்து, தாம் எதிர்கொள்ளும் இடையூறைக் களையுமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர்.(அ-11)

## ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு,நவ.30

ஒஹிய - இதல்கஸ்ஹின்ன இடைப்பட்ட பிரதேசத்தில் புகையிர வீதியில் நேற்று புதன்கிழமை மண் மேடு சரிந்து விழுந்ததில் மலையகப் பகுதிக்கான புகையிரதப் போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக மலையகப் பகுதிக்கான சில புகையிரதங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகப் புகையிரதக் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

## கோப் குழுவினர் தண்டிக்கப்பட வேண்டும்

கொழும்பு,நவ.30

"மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புடன் கலந்துரையாடலை முன்னெடுத்த கோப் குழுவின் உறுப்பினர்கள் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டும்" என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்றுப் புதன்கிழமை தெரிவித்தார்.

"வரலாற்றில் என்றுமில்லாதவாறு இடம்பெற்றுள்ள குறித்த பிணைமுறி மோசடி காரணமாக நாட்டின் பொருளாதாரம் மீளமுடியாத வீழ்ச்சிக்குச் சென்றுள்ளதாகவும், வட்டிவீதம் 100 வீதமாக அதிகரித்துள்ளதாகவும்" அவர் குறிப்பிட்டார். இதன் காரணமாகக் கடந்த 3 வருடங்களில் 1500-2000 பில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் ,வர்த்தகர்கள் கடனை அடைக்க முடியாமல் தற்கொலை செய்துக்கொள்ளுமளவுக்கு வந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# முல்லைக் கடலில் மாற்றமேதுமில்லை

### இடர் முகாமைத்துவ அதிகாரி அறிவிப்பு

முல்லைத்தீவு, நவ.30

முல்லைத்தீவுக் கடற் பிரதேசத்தில் குறிப்பிடத்தக்க எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை என்று முல்லைத்தீவு இடர் முகாமைத்துவ அதிகாரியொருவர் நேற்று மாலை தெரிவித்தார்.

கடற்றொழிலில் ஈடுபடுவோருக்குத் தேவையான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

"பருவபெயர்ச்சி காலநிலை தற்போது இடம்பெற்று வருகின்றது. முல்லைத்தீவு கரையோர பிரதேசத்தில் காற்றின் வேகம் அதிகரித்துள்ளது. இதனால் மீன்பிடி நடவடிக்கைகள் குறிப்பிட்ட வகையில் இடம் பெறவில்லை.

காற்றின் வேகம் 70 தொடக்கம் 80 கிலோமீற்றர் வரையில் வீசுவதனால் மீன்பிடி மற்றும் கடல் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் எனப் பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கடலும் கொந்தளிப்புடன் காணப்படுகின்றது. இந்தநிலை நாளையும் தொடர்ந்தால் கடற்றொழிலில் ஈடுபடுவோர் அவதானமாக செயற்படவேண்டும்" என்றும் குறித்த அதிகாரி தெரிவித்துள்ளார். (அ)

(முன்னர் வந்த செய்தி 02ஆம் பக்கத்தில்)

## சிறுமழைக்கே பெருவெள்ளம்



நெல்லியடி , நவ.30


நெல்லியடி பிரதான வீதியில் அமைந்துள்ள கடைத்தொகுதிக்கு முன்பான பகுதி, கடந்த சில நாட்களாகப் பெய்யும் மழையால் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்றது.

இதனால் குறித்த கடைகளுக்குச் சென்று வர பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

வீதிப் புனரமைப்பின் போது, கால்வாய்கள் சீராக அமைக்கப்படாததன் காரணத்தினாலேயே மழை நீர் ஓட முடியாமல் தேங்கியுள்ளதாகப் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனவே பொதுமக்களின் நன்மையைக் கருத்திற்கொண்டு வீதியில் உள்ள மழை நீர் ஓடுவதற்குரிய ஒழுங்கமைப்புக்களைச் உரிய அதிகாரிகள் செய்ய வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-11)

## கழிவுநீரை வீதியில் விட்ட வெதுப்பகம் மீது நடவடிக்கை



கிளிநொச்சி,நவ.30

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட உதயநகர் கிழக்கில் கழிவு நீரை முறையாக அகற்றாது, அதனை வீதியில் விட்ட வெதுப்பகத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த வெதுப்பகத்தின் கழிவு நீர்க்குழாய், பொது மக்கள் பயன்படுத்தும் வீதியோரமாக அமைக்கப்பட்டுள்ளது. குறித்த கழிவு நீர்க் குழாய் உடைந்ததால், கடந்த பல வாரங்களாக கழிவுநீர் வீதியில் பரவிய நிலையில் காணப்பட்டது.

இதனால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் எழுந்தது. இதனையடுத்து பிரதேச மக்கள், கரைச்சி பிரதேச சபைக்கு அறிவித்தனர். உடனடியாக கழிவுநீர் பரவும் இடத்துக்கு விரைந்த பிரதேச சபைச் செயலாளர் க.கம்சநாதன், குறித்த வெதுப்பக உரிமையாளரைக் கடுமையாக எச்சரித்தார். உடனடியாக பிரதேச சபையின் கழிவு அகற்றும் வாகனத்தை வரவழைத்து கழிவு நீரை அகற்றிய தோடு, பிரதேச சபைக்கு ஏற்பட்ட செலவுத் தொகையான பதினையாயிரம் ரூபாவினையும் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளார். (அ-13)

## இலவசக் கண்ணாடி வழங்கல் கோப்பாயில்

கோப்பாய்,நவ.30

கோப்பாய் பிரதேச தேசோதய சபையின் ஏற்பாட்டில், யாழ்.துஷா கண்ணாடியகத்தின் நிதி அனுசரணையுடன் கோப்பாய் நவமங்கையர் நிவாசத்தில் தங்கியுள்ள மகளிருக்கான இலவசக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மருத்துவர் வி.இந்துஜன் கலந்துகொண்டார். இதன்போது தேசோதய நிறுவனத்தின் தலைவர் இ.மயில்வாகனத்தினால் கண்ணாடிகள் வழங்கி வைக்கப்பட்டன.(அ-11)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



## மறைக்கத்தான் விட்டவையாம்

முதலி போய்ப் பேப்பர் கடையடியிலை என்னைப் பார்த்திருக்கிறான். அங்கை காணேல்லை. "துறுவா" ஆள் வீட்டை வந்திட்டுது. வந்த உடனை கேட்ட கேள்வி "அண்ணை! ஏன் பேப்பர்க் கடைக்கு வரேல்லை?", எண்டது தான். கொஞ்சம் முன்னதா வந்திட்டு வந்தனான். – எண்டு பேப்பரைக் காட்டினன். அண்ணை போன செவ்வாய்கிழமைப் பேப்பரைத் தா. நான் வடிவாப் பாக்கேல்லை எண்டு கேட்டான். எடுத்துக் குடுத்தன். வாங்கிப் பாத்தவன் மாவீரர் கொண்டாட்டப் படங்களை உத்துப் பாத்துக் கொண்டு இருந்தான். ஆளின்ரை கண் கலங்கினதைக் கண்டனான்.

"என்ன முதலி. பேப்பரைப் பாத்து உணர்ச்சி வசப்பட்டிட்டாய் போல கிடக்கு?" எண்டு நான் தான் கதையைத் துவங்கினன்.

"அதொண்டு மில்லை. அதுகளை நினைச்சன். மனம் சோந்து போச்சுது. அதோடை நடந்ததது எல்லாம் சினிமாப் படமாக் கண்ணுக்கை ஒருக்கா ஓடிச்சுது. அப்பிடியே தலை அம்மிப்போட்டுது...... என்ன அண்ணை? ஒன்டு இரண்டே... நினைச்சுப் பாக்க? எல்லாம் குழைசோறு மாதிரிக் கலந்து வந்து என்னைக் குழப்பிப் போட்டுது. இப்ப சண்டை முடிஞ்சு போச்செண்டு சொல்லினம் ஆனால் எங்கடை கையைக் காலைக் கட்ட எல்லே நிக்கினம்"– எண்டு பேப்பரைப் பாத்துக் கொண்டு சொன்னான் முதலி.

இத்தனை பிரச்சினைக்குப் பிறகும், செத்த பிள்ளையளின்ரை தாய் தேப்பன், என்ன தங்கடை பிள்ளையளுக்குக் கோயில் கட்டவே வெளிக்கிட்டவை? ஒரு விளக்கு அல்லது மெழுகுதிரி வைச்சுக் கும்பிடத்தானே விரும்பினவை. அதுக்கென்ன விருங்கோவன். அதுக்கும் எத்தினை பிரச்சினை. கடைசியா இப்ப சொல்லீனம் மாவீரர் கொண்டாட்டத்திலை கேக்கை வெட்டிக் கொண்டாடின ஆக்களிலை நடவடிக்கை எடுக்க வேணுமெண்டு. உண்மையா எனக்கு விளங்கேல்லை இந்த நாட்டிலை என்ன நடக்குதெண்டு.? – எண்டு நான் சொல்ல முதலி வாயிலை கைவைச்சுக் கொண்டு முகட்டைப் பாத்துக் கொண்டிருந்தவன். எனக்குத் தெரியும் முதலீன்ரை சிந்தனை வேறை எங்கையோ நிக்கிதெண்டு, "முதலீ" எண்டன், திடுக்கிட்டு "என்ன?" எண்டான். என்ன கனவு கண்டனி? அதை எனக்கும் சொல்லெடா எண்டன்..

முதலி சொன்னான், "அதில்லை அண்ணை. போன முறையும் அதுக்கு முந்தின முறையெல்லாம் உந்த மாவீரர் நாள் வரேக்கை எங்களைப் போட்டுக் கயக்கினவை, ஏன் இந்த முறை பாத்தும் பாராமலும் இருந்தவை. என்ன பின்னோக்கமோ? என்ன தந்திரமோ தெரியாது?" – எண்டுதான் யோசிச்சனான்.

என்னடா விசர்க்கதை கதைக்கிறாய். ஜெனீவாவிலை உவைக்குப் பிரச்சினை. இருக்கெண்டு தெரியாதே? அமெரிக்காவும் உவையை வெருட்டினபடியாம். ஜே.வி.பி க்காரரை விளக்கு வைக்க விடுறியள், இந்தியாக்காரன் வந்து தங்கடை ஆக்களுக்கு யாழ்ப்பாணத்திலை – கோப்பாயிலை விளக்கு வைக்கிறான். ஆமிக்காரர் தங்கடை ஆக்களுக்கு வைக்கினம். அப்ப இந்த மண்ணிலை பிறந்த ஆக்களுக்குத் தங்கடை, தங்கடை பெடி பெட்டையளுக்கு விளக்கு வைக்க ஏன் விடுறியள் இல்லை? எண்டும் ஆரோ கேட்டவையாம். எல்லாத்தாலையும் தான் உவை பேசமாலிருந்தவை. இல்லாட்டி உவை எப்பவும் சிங்கள ஆக்களுக்குப் பயந்து இருக்கிறவை. செய்ய விடுவினமே? – எண்டு முதலிக்கு விளங்கப்படுத்தினன்.

உடனை முதலி "உப்பிடி எல்லாத்தையும் பிழை, பிழையா விளங்கிக் கொண்டிருந்து ஏமாறப் போறியள். உதெல்லாம் எங்கடை ஆக்களும் சேர்ந்து செய்யிற விளையாட்டு எண்டு தெரியேல்லையே. "ஏக்க இராஜ்ஜிய" எண்டதை மறைக்கத்தான் உந்த விளையாட்டாம். தெரியுமோ? எல்லாம் அரசியல் மயம்." எண்டவன் திரும்பிக்கூடப் பாக்காமல் சைக்கிளை எடுத்துக் கொண்டு போட்டான்.

முதலி எப்பவும் என்னை கதையளிலை வெல்லவிடான். மடக்கிப் போடுவன். என்னத்தை எடுத்தாலும் வில்லங்கமாக் கிடக்கே... ! என்ரை பிள்ளையாரே!

- வில்லங்கம் விநாசி



# இலங்கைக் கடலில் 'டொல்பின் நடனம்'

கொழும்பு,நவ.30


இலங்கையில் நிலவும் காலநிலை மாற்றம் காரணமாக டொல்பின் மற்றும் திமிங்கிலங்களைக் கரையில் பார்க்கும் வாய்ப்பு மக்களுக்குக் கிடைத்துள்ளது.

நுரைச்சோலை - இலந்தடி கடற்கரைக்கு அருகில் சமகாலத்தில் டொல்பின்களின் கூட்டம் ஒன்றைக் காணக்கூடியதாகவுள்ளது. இந்த நாட்களில் கடலில் நீண்ட தூரம் செல்லாமல் டொல்பின், திமிங்கிலங்களைப் பார்வையிடுவதற்குச் சுற்றுலாப் பயணிகளுக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

எதிர்வரும் மார்ச், ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியில் டொல்பின்களின் வருகையைப் பார்வையிட முடியும் எனவும், இந்த நாட்களில் அதிகளவில் காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

மேலும், பல்வேறு அளவிலான டொல்பின்கள் வருகை தருவதாகவும், டொல்பின் நடனங்களைப் பார்வையிட வேண்டும் என்றால், இலந்தடி பிரதேசத்திற்கு வருகைதருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. பகல் நேரங்களில் கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் என்பதனால், காலை நேரங்களில் டொல்பின் மீன்களைப் பார்வையிடுவதென்பது இலகுவானது. இவ்வாறான சம்பவங்கள் இலங்கையில் நடப்பது அபூர்வமான விடயமாகும். (அ)

# மைத்திரிக்கு இன்ப அதிர்ச்சி



தென்கொரியா,நவ.30

தென்கொரியாவுக்கான அரச முறை விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்துள்ளார் தென் கொரிய ஜனாதிபதி.

மைத்திரிக்கும் தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜெயின் அவர்களுக்குமிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு இன்று வியாழக்கிழமை இடம்பெற திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனசியோல் நகரில் அமைந்துள்ள ஜொக்யேசா புராதன பௌத்த விகாரையில் வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் அங்கு விஜயம் செய்த போது, அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும் வகையில் கொரிய ஜனாதிபதியும் அங்கு வருகைதந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சினேகபூர்வமாக வரவேற்றார். இத்தகைய விசேட வரவேற்பினைத் தனக்கு வழங்கியமைக்காக தென் கொரிய ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, இந்த இதயபூர்வமான நட்புணர்வு தமது வாழ்வின் முக்கிய ஞாபகக் குறிப்பாக அமையும் எனக் குறிப்பிட்டார். (அ)

# அந்த நாள் ஞாபகம்.....!



**30.11.1930**

பொன்னம்பலம் இராமநாதன் இறைபதம் எய்தினார்.

# சுற்றுலாத்துறையில் திருமலைத் துறைமுகம்



திருகோணமலை,நவ.30

திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றுலாத் துறையுடன் தொடர்புபடுத்த முடியுமாயின் சுற்றலாத் துறையை மேம்படுத்த முடியும் என்று துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்று புதன்கிழமை தெரிவித்தார்.

திருகோணமலைத் துறை முகத்தை அபிவிருத்தி செய்யப் பாரிய திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதென்றும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

# தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் தெரிவு

வவுனியா,நவ.30

எதிர்வரும் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நேர்முகத் தேர்வு மன்னார் மற்றும் வவுனியாவிலுள்ள கட்சியின் அலுவலகத்தில், நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை முதல் ஆரம்பமாகி இன்று வியாழக்கிழமை வரை தொடர்ச்சியாகமூன்று நாட்கள் நடைபெறுகிறது.

இதேவேளை, கடந்த ஒரு மாதங்களுக்கு முன்னர் கட்சி விடுத்த அறிவிப்புக்கு அமைய, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட, வடக்கில் இருந்து பெரும் எண்ணிக்கையிலானவர்கள், விண்ணப்பித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதற்கமைய, சுமார் இரண்டாயிரம் விண்ணப்பங்கள் இவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ளதாகக் கட்சியின் வவுனியா செயற்குழு கூறியுள்ளது. (அ)

# "குறைய வேண்டும் வேலை நேரம்"

## வலியுறுத்துகிறார் பிமல் ரத்நாயக்க



கொழும்பு,நவ.30

தொழிலாளர்கள் வேலை செய்யும் நேரம் குறைக்கப்பட வேண்டும் என்று ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வலியுறுத்தினார்.

"தொழில்நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக தற்போது மனித உழைப்பின் நேரம் குறைக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இலங்கையில் மாத்திரம் மனித உழைப்பின் நேரம் மென்மேலும் அதிகரிக்கப்படுகின்றது. தனியார் துறைகளில் பணியாற்றும் ஊழியர்கள் ஒன்பது மணிநேரம் வரை பணியாற்ற நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள்.

அரச ஊழியர்களுக்கு அவ்வாறான நிலை இல்லை என்ற போதும் போக்குவரத்தில் அவர்களும் கணிசமான நேரம் செலவிட வேண்டியுள்ளது. இதற்குப் பதிலாக ஊழியர்களின் கடமை நேரத்தை 8 மணி நேரத்தில் இருந்து ஆறு மணிநேரமாகக் குறைக்க வேண்டும். மேலும் உழைப்புக்கேற்ப ஊதியம் அதிகரிக்கப்பட வேண்டும்" என்றும் தெரிவித்தார். (அ)

# துஷ்பிரயோக முயற்சி தோல்வி சிசுவை பலியெடுத்த காமுகர்கள்



கொழும்பு,நவ.30

19 வயதான குடும்பப் பெண்ணை வல்லுறவுக்கு உட்படுத்துவதற்கான முயற்சி கைகூடாமையால், அவரிடமிருந்த, இரண்டு மாதங்களும் 21 நாட்களுமேயான பெண் சிசுவை, அபகரித்து நீர்நிரம்பிய பரலுக்குள் மூழ்கடித்துக் கொலைச் செய்த சந்தேகநபர்கள் இருவரையும் தேடி, கதிர்காமம் பொலிஸார் வலைவீசியுள்ளனர்.

கதிர்காமம் மெனிக்புர கிராமத்தைச் சேர்ந்த ஜயனி சந்ரேகா என்ற பெண், தனது சிசுவுடன் வீட்டில் தனியாக இருந்த போது நுழைந்த இருவர், பெண்ணிடமிருந்து சிசுவைப் பறித்தெடுத்துள்ளதுடன், குறித்த பெண்ணைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்றுள்ளனர்.

எனினும் சுதாகரித்துக் கொண்ட பெண், அவர்களது பிடியிலிருந்து தப்பியுள்ளதுடன், வெளியே வந்து கூக்குரலிட்டுள்ளார். பெண்ணின் கூக்குரலைக் கேட்டு அயலவர்கள் அவ்விடத்தில் ஒன்றுகூடியதால் மேற்படி இருவரும் சிசுவை, நீர் நிரம்பிய பரலுக்குள் அமிழ்த்திவிட்டு, ஓட்டோ ஒன்றில் தப்பிச் சென்றுள்ளனர். அயலவர்களின் உதவியுடன் சிசுவைத் தேடிய அந்தப் பெண், பரலுக்குள்ளிருந்து சிசுவை, சடலமாக மீட்டுள்ளார். அதனையடுத்தே, இந்த விவகாரத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இருவருக்கு எதிராக வலைவீசப்பட்டுள்ளதென பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வாக்களிக்கத் தகுதியற்றவரா? அவகாசம் 5ஆம் திகதி வரை




கொழும்பு,நவ.30

2017 வாக்காளர் பெயர்ப் பட்டியலில் தகுதியற்றவர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தால், அதுதொடர்பில் அடுத்த மாதம் 5ஆம் திகதிக்கு முன்னதாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்த முடியுமெனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவின் கையொப்பத்துடனான ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வாக்காளர்களின் பெயர் உரிய வகையில் அவர்களது உள்ளூராட்சித் தொகுதிக்கான பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்காவிட்டாலும், அது குறித்தும் எழுத்து மூலம் முறைப்பாடு செய்ய முடியும். 93 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் 2017ம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலின் அடிப்படையில் நடைபெறவுள்ளது. இந்த வாக்காளர் பெயர் பட்டியல் தேர்தல் நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமாக நியூசிலாந்து செல்ல முயன்றவர்கள் கைது




புத்தளம், நவ. 30

படகு மூலம் சட்ட விரோதமாக நியூசிலாந்து செல்ல முயன்ற மூவரைப் புத்தளம் பொலிஸார்கைது செய்துள்ளனர்.

புத்தளம் - செல்வபுரம் பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் சிலர் தங்கியிருக்கின்றனர் எனப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது.

இதன்போது புத்தளம் உடப்பைச் சேர்ந்த 21 வயதான இளைஞர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

அண்மையில் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா செல்ல முயன்ற யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் பிரதேசங்களைச் சேர்ந்த 22 பேரைப் புத்தளம் பொலிஸார் கைது செய்தனர். இந்தக் கைதின் தொடர்ச்சியாகவே இக்கைதும் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச)




## படை விட்டோடிகள் 1,121 பேர் கைதாகினர்

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற ஆயிரத்து 121 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என இராணுவப் பேச்சாளர் ஜெனரல் றொசான் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களுக்கான பொது மன்னிப்புக் காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, 28 ஆயிரம் படை விட்டோடிகளைக் கைது செய்வதற்கான நடவடிக்கை கடந்த 24 ஆம் திகதி ஆரம்பமானது.

இதையடுத்தே ஆயிரத்து 121 பேர் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களில் ஒரு கடேற் அதிகாரி, 39 பெண் சிப்பாய்களும் உள்ளனர். அத்துடன் இந்நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ச)

# தொடர்ச்சிகள்

## கோத்தா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோசடி செய்தார் என்ற குற்றத்திற்காக நிதிக் குற்றப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப் படவிருந்தார். இந்த நிலையில் தம்மைக் கைது செய்வதற்குத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்றை அவர் தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்ட இரு நீதியரசர்கள் கொண்ட நீதி மன்றம், வரும் டிசெம்பர் 6 ஆம் திகதி வரை கோத்தபாயவை கைது செய்ய இடைக் காலத் தடை பிறப்பித்தது. (ச)

## பிரபாகரனே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராடினாரோ அதற்கான உண்மைத் தன்மை அவரிடம் இருந்தது.” இவ்வாறு தலைவர் பிரபாகரனுக்குப் புகழாரம் சூட்டியிருக்கிறார் பொதுபல சேனாவின் செயலாளர் ஞானசார தேரர். கொழும்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

“விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்தாலும், இலங்கை இராணுவத்தில் இருந்தாலும், சிங்களவராக இருந்தாலும், தமிழ், முஸ்லிமாக இருந்தாலும் அவர்கள் இந்நாட்டின் மக்களே என்பதை நாங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்கின்றோம்.

பிரபாகரனின் போராட்ட நோக்கம் சிறந்ததாக இருக்கலாம். எமது சிங்களத் தலைவர்களை விடவும் விடுதலைப் புலிகளின் தலைவர் சிறந்த தலைவர். அவரிடம் நேர்மை இருந்தது. எந்த நோக்கத்திற்காகப் போராடினாரோ அதற்கான உண்மைத் தன்மை அவரிடம் இருந்தது. எனினும் அவர் தெரிவுசெய்த வழிதான் பிழை - ஆயுதத்தை கையில் ஏந்தியது தவறு.

வடக்கில் இருப்பவர்கள் இந்தியாவின் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள் அல்லர். விடுதலைப் புலிகளின் போராட்டமும், ஜே.வி.பியின் போராட்டத்தை ஒத்ததே. இந்தப் போராட்டத்தில் உயிரிழந்தவர்களும் எமது மக்களே. எனினும் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதாக தெற்கு மக்களுக்கு கூறிவிட்டு வடக்கில் வேறு ஒன்றை செய்வதை ஏற்கமுடியாது. இதனால் இனங்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்படுகிறது. சாதாரண மக்கள் இதனை செய்யமாட்டார்கள். இதனைத் தூண்டி ஏற்பாடு செய்கிறவர்களுக்கு எதிராக நடவடிக்கை வேண்டும் என அவர் கூறினார். (ச)

## விரிவடைகிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யக் கோரி இ.போ.ச. ஊழியர்கள் செவ்வாய்க்கிழமை தொடக்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் வேலை நிறுத்தத்தால் மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் தொழிற்சங்கத்தினருக்கும் போக்குவரத்து சபையினருக்கும் இடையே இடம்பெற்ற பேச்சும் தோல்வியடைந்தது.

இதையடுத்து இந்தப் போராட்டம் விரிவடையும் என தொழிற்சங்கத்தினர் தெரிவித்தனர். இதற்கமைய இன்று தொடக்கம் வெளி மாகாணங்களுக்கான பஸ் சேவையையும் நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இன்று காலை தொடக்கம் ஊழியர்கள் யாழ். பேருந்து நிலையத்தில் போராட்டத்தில் ஈடுபடுவர் என தொழிற்சங்க நடவடிக்கை ஒழுங்கமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார். (ச)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞரான இக்ரம் உள்ளிட்ட மூவர் அடங்கிய குழுவே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்தே கொழும்பில் பதுங்கியிருந்த இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டனர். இவர்களிடம் தீவிர விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன என்றும் அவர்களிடம் பெற்ற தகவல்களை வைத்து மேலும் சிலர் கைது செய்யப் படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டம் வலியுறுத்தினார் யாழ். மறை மாவட்ட ஆயர் வண. கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த இலங்கைக்கான கனடா தூதுவர் டேவிட் மைக்கினன் யாழ். ஆயரை அவரது இல்லத்தில் நேற்று சந்தித்தார். வடக்கு மக்களின் பிரச்சினைகள் குறித்து இந்தச் சந்திப்பில் பேசப்பட்டது.

“போர் நடந்த காலத்திலும், போர் முடிவுக்கு வந்த பின்னரும் தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்களைத் தேடி உறவுகள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர். அவர்களுக்கு, உரிய பதிலை அரசாங்கம் இன்னும் வழங்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தை இழுத்தடிக்காமல் காத்திரமான நடவடிக்கை எடுக்க இலங்கை அரசுக்கு கனடா உரிய அழுத்தத்தை வழங்கவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் பட்டதாரிகள் உள்ளிட்ட 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட இளையோர் வேலை வாய்ப்புக்கு காத்திருக்கின்றனர். அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கக் கூடிய வகையில் கனடிய அரசு யாழ்ப்பாணத்தில் முதலீடுகளைச் செய்யவேண்டும்” என்று ஆயர் தூதுவருக்கு எடுத்துக் கூறினார்.

இதற்கு “தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கனடா அரசு, இலங்கைக்கு நேரடியாகவும் ஐ.நாவிலும் அழுத்தங்களை வழங்கி வருகிறது. தமிழ் மக்களின் விடயத்தில் கனடா தொடர்ந்தும் கரிசனையாக இருக்கும்” என்று கனடா தூதுவர் டேவிட் மைக்கினன் பதிலளித்தார். (ச)

## தனிநாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹட்சன் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன் முடிவில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஊடகவியலாளரிடம் கருத்துத் தெரிவித்தார்.

மேலும், “அவுஸ்திரேலியாவில் உள்ளூராட்சி அலகு, மாகாண அலகு மற்றும் சமஷ்டி முறைமையில் அரசாட்சி என அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன. அங்கு ஒவ்வொரு மாகாணங்களும் தங்களைத் தாங்கள் ஆளும் வசதி வழங்கப்பட்டுள்ளது.

இதனையே இங்கும் தமிழ் மக்கள் கேட்கிறார்கள். இதற்கு ஒவ்வொரு அரசும் முட்டுக்கட்டையாக இருந்து வந்துள்ளன. சமஷ்டியை வழங்க மறுப்பதற்கு அவர்களின் அச்ச நிலையும் காரணம். சமஷ்டி அதிகாரப் பகிர்வைப் பெற்று தமிழர்கள் தனிநாடாகப் பிரிந்து சென்றுவிடுவார்கள் என்ற அச்சம் தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கு உண்டு.

ஆனால் சமஷ்டி அதிகாரப் பகிர்வை வழங்காது விட்டால்தான் தமிழ் மக்கள் தனிநாடு கேட்பர். தமிழ் மக்களின் சுயாட்சிக்கு இடையூறு விளைவிக்காதுவிடின் தனிநாடு கேட்கும் அவசியம் அவர்களுக்கு ஏற்படாது” என ஆஸி. துதுவருக்குத் தான் விளக்கினார் என முதலமைச்சர் கூறினார். (ச)

## பேய்க்காற்றால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடும் மழையும், மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் காற்றும் வீசியது.

மரங்கள் முறிந்து வீழ்ந்தமையால் அப்பகுதிகளில் போக்குவரத்து, மின் தடைகள் ஏற்பட்டுள்ளன. இவற்றை அகற்ற விசேட அதிரடிப் படை களமிறக்கப்பட்டுள்ளது. எனினும் பல இடங்களில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து விவரங்கள் தெரியவரவில்லை.

இதேவேளை, கடும் காற்றும் மழையும் இன்றும் நீடிக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மணிக்கு சுமார் 100 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என்பதால் மீனவர்களை மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ச)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனுவும் சமர்ப்பித்தனர்.

இந்த வழக்கு கடந்த 15 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கைதிகளுக்கு எதிரான சாட்சிகள் மூவரும் வவுனியா மேல் நீதிமன்றுக்கு வர அஞ்சுகின்றனர். இதனாலேயே அநுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு வழக்கு மாற்றப்பட்டது எனத் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் போராட்டத்தின் போது, சாட்சிகளில் ஒருவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது வவுனியா மேல் நீதிமன்றில் சாட்சியமளிக்க சம்மதம் தெரிவித்தார். எனினும் வெளிநாட்டில் வசிக்கும் இருவரின் சம்மதத்தைப் பெற அவகாசம் தேவை” எனக் கேட்டிருந்தார். இதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று இந்த மனு மீதான விசாரணை இடம்பெற்றது. இதன்போது சட்ட மா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி, “வெளிநாட்டில் வசிக்கும் இரண்டு சாட்சிகளை தொடர்பு கொள்ள முடியவில்லை. இதனால் கால அவகாசம் மேலும் தேவை எனக் கோரினார்.

அத்துடன் கைதிகளான மதியரசன் சுலக்சன், கணேசன் தர்சன், இராசதுரை திருவருள் ஆகியோரின் வழக்கு விசாரணைகள் இனி அநுராதபுரம் மேல் நீதிமன்றில் இடம்பெறாது என்றும் தெரிவித்தார். இவற்றைக் கவனத்தில் கொண்டு எதிர்வரும் 12ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கிய மேன்முறையீட்டு நீதிமன்றம் மனு மீதான விசாரணையையும் ஒத்திவைத்தது. (ச)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனைகளுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli



# விஷாலுக்காக தனுஷ் பாடல்



சென்னை,நவ.30

2005ஆம் ஆண்டு விஷால் நடிப்பில் வெளியான சூப்பர் ஹிட் படம் சண்டைக் கோழி. இதன் இரண்டாம் பாகம் 12 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது உருவாகி வருகிறது.

லிங்குசாமி இயக்க, விஷால் உடன் கீர்த்தி சுரேஷ், வரலட்சுமி சரத்குமார், அர்ஜய், ராஜ்கிரண் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்க விஷாலே தயாரிக்கிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்புக்கள் வளர்ந்து வரும் நிலையில் மறுபுறம் பாடல் இசைச்சேர்க்கையும் நடக்கிறது. சண்டக்கோழி முதல் பாகத்தைப் போலவே சண்டக்கோழி -2 பாடல்களையும் ஹிட்டாக்க வேண்டும் என்ற முனைப்பில் இசையமைத்து வருகிறார் யுவன். இதனிடையே இந்தப் படத்தில் இடம்பெறும் ஒரு பாடலை நடிகர் தனுஷ் பாடியிருக்கிறார். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இதற்கான இசைச் சேர்க்கை நடந்துள்ளது. (இ)

# தந்தை–மகன் இணையும் 'மிஸ்டர் சந்திரமௌலி'



சென்னை,நவ.30

கார்த்திக், கவுதம் கார்த்திக் முதன்முறையாக இணைந்து நடிக்கும் 'மிஸ்டர் சந்திர மௌலி' படத்தைத் திரு இயக்கவுள்ளார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு நேற்று புதன்கிழமை தொடங்கியது.

'நான் சிகப்பு மனிதன்' படத்துக்குப் பிறகு திரு இயக்கும் படம் 'மிஸ்டர் சந்திர மௌலி'. கார்த்திக், கவுதம் கார்த்திக், இயக்குநர் மகேந்திரன், இயக்குநர் அகத்தியன், ரெஜினா, வரலட்சுமி, சந்தோஷ், சதீஷ், ஜெகன், விஜி சந்திரசேகர், 'மைம்' கோபி, மனோபாலா ஆகியோர் நடிக்கும் இந்தப் படத்துக்கு ரிச்சர்ட் எம்.நாதன் ஒளிப்பதிவு செய்கிறார். சாம் இசையமைக்கிறார்.

'அனேகன்' படம் மூலம் புதுப்பொலிவுடன் களமிறங்கிக் கலக்கிய கார்த்திக், தற்பொழுது 'தானா சேர்ந்த கூட்டம்' படத்தில் நடித்து வருகிறார். தந்தை- மகன் பற்றிய ஒரு மிகவும் சுவாரஸ்யமான கதையை இயக்குநர் திரு, கார்த்திக்கிடம் சொன்ன போது, அது அவருக்கு மிகவும் பிடித்து போக, படத்தில் நடிக்க உடனே சம்மதித்துள்ளார். (இ)



# சீறுகிறது எரிமலை பரவுகிறது கரும்புகை

ஜகார்த்தா,நவ.30

இந்தோனேசியாவிலுள்ள அகுங் எரிமலை தொடர்ந்து வெடித்து வருவதால், பாலித் தீவின் விமான நிலையம் இரண்டாவது நாளாகவும் மூடப்பட்டுள்ளது.

பாலித்தீவில் மவுண்ட் அகுங் என்ற எரிமலை உள்ளது. இந்த எரிமலை கடந்த 21ஆம் திகதி லேசாக சீறத் தொடங்கியது. கடந்த 25ஆம் திகதி முதல் எரிமலை சீற்றம் அதிகரித்தது. இதன்காரணமாக 10 கி.மீ. சுற்றளவுக்கு எரிமலைச் சாம்பல் பரவியுள்ளது.

எரிமலை அவ்வப்போது வெடித்துச் சிதறுவது சுமார் 12 கி.மீ. தொலைவு வரை கேட்கிறது. மலை உச்சியில் சுமார் 11,150 அடி வரை கரும்புகை சூழ்ந்துள்ளது. இதைத் தொடர்ந்து பாலித் தீவு விமான நிலையம், அருகில் உள்ள லொம் போங் தீவு விமான நிலையம் ஆகியவை மூடப்பட்டுள்ளன. 450இற்கும் மேற்பட்ட விமான சேவைகள் கடந்த திங்கட்கிழமை ரத்துச் செய்யப்பட்டன.

இந்த நிலையில் நேற்று புதன்கிழமையும் எரிமலை வெடிப்புத் தொடர்ந்து வருவதால் இரண்டாவது நாளாகவும் விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. எரிமலை வெடிப்பால், அருகில் உள்ள பகுதிகளில் இருந்து இதுவரை 10,000க்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறி உள்ளனர். (இ)

# இளவரசரின் புதிய திட்டம்



சவுதி அரேபியா,நவ.30

பயங்கரவாதத்தைக் கூட்டு முயற்சியால் மட்டுமே முறியடிக்க முடியும் எனச் சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகம்மது பின் சல்மான் தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மை இஸ்லாமியர்களைக் கொண்ட 41 நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களின் கூட்டத்தில் பேசிய இளவரசர் "குறித்த 41 நாடுகளின் கூட்டணியால் மட்டுமே மத்திய கிழக்கு நாடுகளில் உருவாகும் பயங்கரவாதத்தை வேரறுக்க முடியும். கடந்த பல ஆண்டுகளாக நமது நாடுகளில் பயங்கரவாதம் செயல்பட்டு வந்தது. தற்போது அந்த நிலை முடிவுக்கு வரும் காலம் நெருங்கி வந்துள்ளது" என்றார்.

சவுதி அரேபியாவின் எதிர்கால அரசராகப் பொறுப்பேற்கவிருக்கும் அவர், பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை முன்னெடுத்து வருகிறார். தற்போது 31 வயதாகும் இவருக்குத் ஏனைய அரச குடும்ப உறுப்பினர்களை போன்று அல்லாமல் ஒரு மனைவியும் 4 குழந்தைகளும் உள்ளனர். சவுதியின் முன்னாள் அரசர் ஒருவருக்கு 23 மனைவிகளும் 45 மகன்களும் இருந்தனர். ஆனால் அது போன்ற பழமைவாதத்தைக் கடைப்பிடிக்காமல் இளவரசர் சல்மான் தனித்து நிற்கிறார். இருப்பினும் ஊழல் மற்றும் முறைகேடு தொடர்பாக இளவரசர் சல்மானின் நடவடிக்கைகளுக்கு அரச குடும்பத்தினரிடையே வேறுபட்ட கருத்து நிலவி வருகிறது. (இ)


# தாவும் எம்.பிக்கள்

சென்னை, நவ.30

இரட்டை இலைச் சின்னம் விவகாரத்தில் தினகரன் அணிக்கு ஏற்பட்ட பின்னடைவை அடுத்து அவரது அணியிலிருந்த மூன்று எம்.பி.க்கள் எடப்பாடி பழனிசாமி அணிக்குத் தாவிய நிலையில் மேலும் இரு எம்.பி.க்கள் தாவியுள்ளனர்.

தினகரன் அணியில் இருந்த ராஜ்ய சபா எம்.பி க்கள் விஜிலா சத்யானந்த், கோகுல கிருஷ்ணன், நவநீதகிருஷ்ணன் ஆகியோர் திடீரென கடந்த திங்கட்கிழமை எடப்பாடி அணிக்குத் தாவி, அவரைச் சந்தித்துப் பேசினர். அப்போது அ.தி.மு.க அமைச்சர்களும் எடப்பாடியுடன் இருந்தனர்.

இந்நிலையில் நேற்று புதன்கிழமை திண்டுக்கல் எம்.பி. உதயகுமார், வேலூர் எம்.பி.செங்குட்டுவன் ஆகிய இரு எம்.பி.க்களும் முதல்வர் எடப்பாடி பழனிசாமியைச் சந்தித்துப் பேசிய பின்னர்,இரட்டை இலைச் சின்னத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் முதல்வர் அணியுடன் இணைந்ததாகத் தெரிவித்தனர். (இ)



# புதிய ஆங்கிலச் சொல்: அசத்திய சிறுவன்

ஒட்டாவா,நவ.30

கனடாவைச் சேர்ந்த லெவி என்னும் 6 வயதுச் சிறுவன், ஆங்கிலத்தில் புதிய வார்த்தையைக் கண்டுபிடித்துச் சாதனை படைத்துள்ளான்.

ஆங்கிலத்தில் உள்ள வார்த்தைகளைத் திருப்பி எழுதும் போது வேறு வார்த்தை உருவானால், அதனைக் குறிப்பிட்டுச் சொல்வதற்கு வார்த்தை இல்லை. அதனைக் குறிப்பிடுவதற்கு 'லெவிடிரோம்' என்ற புதிய வார்த்தையை





லெவி என்ற சிறுவன் கண்டுபிடித்துள்ளான்.

லெவியின் பெற்றோர், இந்த வார்த்தை ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் இடம்பெற வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். ஆனால், குறிப்பிட்ட காலத்துக்கு, மக்கள் இந்த வார்த்தையைப் பயன்படுத்தினால் மட்டுமே, ஒக்ஸ்போர்ட் அகராதியில் இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. சிறுவனின் கண்டுபிடிப்புக்கு அனைவரும் வரவேற்பளித்து வருகின்றனர். மேலும், இந்த வார்த்தை அகராதியில் இடம் பெறப் பலரும் உதவி வருகின்றனர். விரைவில், இந்த வார்த்தை அகராதியில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

# இமானுவேலின் விருந்தில் ஒபாமா

பரிஸ்,நவ.30

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனுடன், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா இரவு விருந்தில் கலந்து கொள்ளவுள்ளார்.

நெப்போலியன் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள ஒபாமா, அதன் பிறகு ஒரேஞ்ச் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி ஸ்டீபன் ரிச்சர்டின் தொழில் நுட்ப வலைப்பின்னல் வீரர்களின் தொடர்பாடல் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளார். இந்த மாநாடுகளை முடித்துவிட்டு, பிரான்ஸில் உள்ள எலிசே மாளிகையில் நடைபெற உள்ள



இரவு விருந்தில் கலந்துகொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது. பிரான்ஸில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது ஒபாமா, இமானுவேல் மக்ரோனுக்கு ஆதரவளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# பலிஸ்டிக் ஏவுகணை ஏவியது வடகொரியா

தென்கொரியா,நவ.30

வடகொரியா பலிஸ்டிக் வகை ஏவுகணைச் சோதனையை நேற்றுப் புதன்கிழமை மேற்கொண்டுள்ளதாகத் தென்கொரியா தெரிவித்துள்ளது.

உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி வடகொரியா தொடர்ந்து தனது சோதனையை மேற்கொண்டு வந்தது. இதையடுத்து சுமார் இரண்டு மாத காலமாகச் சோதனை மேற்கொள்ளாமல் இருந்த வடகொரியா, எந்த நேரத்திலும் ஏவுகணைச் சோதனையை மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் வடகொரியா நேற்று, பலிஸ்டிக் வகை ஏவுகணைச் சோதனை ஒன்றை மேற்கொண்டுள்ளதாகத் தென்கொரியா தெரிவித்துள்ளது.

அது கிழக்கு நோக்கிப் பறந்ததாகவும், ஆனால் அது முழுமையாக எந்த வகையில் தயார் செய்யப்பட்டது, எவ்வளவு தூரம் சென்றது என்பது குறித்துத் தென்கொரியா மற்றும் அமெரிக்கா ஆய்வு மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அதிரடி மாற்றம்

கொழும்பு, நவ. 30

இந்தியாவுக்குக் கிரிக்கெட் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அந்த அணியுடன் 3 டெஸ்ட் போட்டிகள், 3 ஒரு நாள் போட்டிகள், 3 இருபது–20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில், நடந்து முடிந்த இரண்டு டெஸ்ட்களில் ஒன்றை சம நிலையில் முடித்த அதே வேளை, இரண்டாவது டெஸ்டில் படுதோல்வியடைந்தது.

இந்நிலையில் இலங்கையின் ஒருநாள் மற்றும் இருபது–20 அணிகளுக்கான தலைவராக திசார பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்பு இலங்கை அணியின் ஒருநாள் அணி தலைவராக உபுல் தரங்க பணியாற்றினார். அவருக்குப் பதிலாக அந்தப் பொறுப்பு பெரேராவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலையில் அணித்தலைவர் பொறுப்பிலிருந்து மத்யூஸ் விலகியபோது டெஸ்ட் அணியின் தலைவராக தினேஷ் சண்டிமாலும் ஒருநாள் அணியின் தலைவராக உபுல் தரங்காவும் நியமிக்கப்பட்டார்கள். அதன்பின்னர் நடைபெற்ற தென்னாபிரிக்கா, இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டிகளில் வெள்ளையடிக்கப்பட்டது இலங்கை அணி.

அதேவேளை, பாகிஸ்தானில் நடைபெற்ற கடைசி இருபது–20 போட்டியில் பங்கேற்க தரங்க மறுத்தார். இதையடுத்து பாகிஸ்தானுக்கு எதிரான இருபது–20 அணிக்குத் தலைவராக திசார பெரேரா நியமிக்கப்பட்டார். அந்தத் தொடரிலும் இலங்கை அணியால் ஓர் ஆட்டத்திலும் வெல்ல முடியாமல் போனது. எனினும், தேர்வுக் குழுவினருக்கு பெரேராவின் தலைமைப்பண்பு மீது நம்பிக்கை ஏற்பட்டுள்ளதால் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் மற்றும் இருபது–20 தொடர்களின் தலைவராக அவரை நியமித்துள்ளனர். (ஐ)

# 10 க்கு ஓய்வு

சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து சச்சின் பயன்படுத்திய ஜெர்ஸி எண்ணான 10க்கு ஓய்வு கொடுக்க இந்தியக் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

சச்சின் டெண்டுல்கர், இந்தியக் கிரிக்கெட் அணிக்காக 24 ஆண்டுகள் விளையாடியுள்ளார். அவர் 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றார்.

சச்சினை எந்த அளவுக்கு ரசிகர்கள் நேசிக்கிறார்களோ, அதே போன்று அவரது ஜெர்ஸி நம்பரான 10க்கும் அதிக புகழ் உள்ளது. அது சச்சினின் தனி அடையாளமாகவே பார்க்கப்படுகிறது.

கடைசியாக 2012 மார்ச் மாதம் பாகிஸ்தான் அணிக்கு எதிராக விளையாடிய போது 10ஆம் எண் கொண்ட ஜெர்ஸியை சச்சின் அணிந்திருந்தார். அதன்பின்னர் அவர் ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுப் பெற்றுவிட்டதால், சர்வதேச கிரிக்கெட்டில் அந்த எண்ணை இந்திய அணியினர் எவரும் பயன்படுத்தாமல் இருந்து வந்தனர்.

இந்த நிலையில், கடந்த ஆகஸ்ட் மாதம் கொழும்பில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் இந்திய அணிக்காக அறிமுகமான ஷர்துல் தாகூர் 10ஆம் எண் ஜெர்ஸியை அணிந்து விளையாடினார்.

இதை சச்சின் ரசிகர்கள் கடுமையாக விமர்சித்தனர். சமூக வலைத் தளங்களில் இந்தியக் கிரிக்கெட் சபையையும், தாகூரையும் கிண்டல் செய்தனர். ஷர்துல், 'சச்சினாக முயற்சி செய்கிறார்' என்று விமர்சனம் செய்தனர். ஆனால், ஹர்பஜன் உள்ளிட்ட சில இந்திய வீரர்கள் ஷர்துலுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தனர்.

இதுகுறித்து ஷர்துல் விளக்கமளிக்கையில்,

"நியூமராலஜிக்காகத் தான் இந்த எண்ணை நான் உபயோகம் செய்தேன். எனது பிறந்த திகதியின் 10. இதனால்தான் 10ஆம் எண்ணை பயன்படுத்தினேன்" என்றார்.

இந்நிலையில், இந்தியக் கிரிக்கெட் சபை நிர்வாகி ஒருவர் இதுகுறித்துக் கூறுகையில்,

"இந்த விவகாரம் தேவையில்லாமல் பெரிதுபடுத்தப்படுகிறது. இதனால், அந்த எண்ணை நீக்குவது சிறந்தது. இருப்பினும், இந்திய 'ஏ' அணிக்காகவும், சர்வதேச அளவில் அல்லாத போட்டிகளில் விளையாடும்போது வீரர்கள் இந்த எண்ணைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என வீரர்களை கிரிக்கெட் சபை அறிவுறுத்தியுள்ளது" என்றார்.

இதனால் சர்வதேசக் கிரிக்கெட்டில் இனி இந்திய வீரர்கள் 10ஆம் எண்ணைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (ஐ)



# கதி கலங்கிய டோனி

காஷ்மீர், நவ. 30

இந்தியக் கிரிக்கெட் வீரரான டோனி பங்கேற்ற நிகழ்ச்சியில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் அதிரடி வீரரான அப்ரிடிக்கு ஆதரவாக கோஷங்கள் ஒலித்ததால் சலசலப்பு ஏற்பட்டது.

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரான டோனி, டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்ற நிலையில், ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் மாத்திரமே பங்கேற்று வருகிறார்.

இந்திய இராணுவத்தின் கௌரவ லெப்டினன்ட் கேர்னல் பதவி வகிக்கும் அவர், சமீபத்தில் காஷ்மீருக்குச் சென்றார். அங்கு அவர் கிரிக்கெட் வீரர்களுடன் விளையாடினார். பின்னர் இராணுவம் சார்பில் நடத்தப்பட்ட போட்டிகளில் வென்றவர்களுக்குப் பரிசளித்தார். இந்திய இராணுவ சீருடையில் டோனி இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

பரிசளிப்பு விழாவில் பாகிஸ்தான் முன்னாள் அதிரடி வீரர் பூம்பூம் அப்ரிடி மற்றும் பாகிஸ்தானுக்கு ஆதரவான கோஷங்கள் எழுப்பப்பட்டன. இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து, டோனி சிறிது கதி கலங்கிப் போனார். (ஐ)

# இருபது–20 தொடரிலும் கோஹ்லி இல்லை?



இலங்கைக்கு எதிரான இருபது-20 கிரிக்கெட் போட்டியிலும், இந்திய அணியின் தலைவரான விராட் கோஹ்லி விளையாடுவது சந்தேகம் என்று தகவல் வெளியாகி உள்ளது.

இலங்கை அணியுடனான டெஸ்ட் தொடர் முடிந்ததும் ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகள் நடைபெறவுள்ளது.

ஒருநாள் போட்டிக்கான இந்திய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது. 20 ஓவருக்கு இன்னும் தேர்வு செய்யப்படவில்லை.

தொடர்ந்து போட்டிகளில் விளையாடி வருவதால் விராட் கோஹ்லிக்கு ஒருநாள் தொடரில் ஓய்வு வழங்கப்பட்டது.

இந்த நிலையில் இலங்கை அணிக்கு எதிரான இருபது-20 தொடரிலும் விராட் கோஹ்லி ஆடுவது சந்தேகம் எனத் தெரியவருகிறது.

சொந்தக் காரணங்களுக்காக அவர் இருபது-20 தொடரில் ஆடுவது குறித்து இதுவரை எந்த முடிவும் செய்யவில்லை. இதை கிரிக்கெட் சபை நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனால்தான் இருபது-20 போட்டிக்கான வீரர்கள் தேர்வு தாமதமாகியுள்ளது என்றும் தெரிவித்தார். (ஐ)



# வெளியேற்றுங்கள்!

ஆஷஸ் தொடரில் பங்கேற்றிருக்கும் இங்கிலாந்து அணியின் ஜேக் போலை உடனடியாக அணியிலிருந்து விலக்குமாறு அந்த அணியின் முன்னாள் வீரரான கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி, படுதோல்வியடைந்தது.

இந்தநிலையிலேயே பீற்றர்சன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

"முதல் டெஸ்ட் அணியில் இடம்பிடித்திருந்த ஜேக் போலை நான் இந்தப் போட்டியில் விளையாட பரிந்துரைக்க மாட்டேன். அதற்கு வாய்ப்பே இல்லை. அவர் நல்ல பந்துவீச்சாளராக இல்லை என்றுதான் நினைக்கிறேன். சர்வதேச கிரிக்கெட் மட்டத்தில் அவர் சிறந்த வீரர் இல்லை" என்று கறாராக விமர்சனத்தை முன்வைத்துள்ளார் பீற்றர்சன்.

ஆஷஸ் முதல் டெஸ்ட்டின் இரண்டு இன்னிங்ஸ்களிலும் சேர்த்து, ஒரு விக்கெட்டை மாத்திரமே ஜேக் போல் வீழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 30.11.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.